DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC 426/2021
**Depositions of PW 5**

| | | | |
|---|---|---|---|
| Name | அன்பழகன் | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd Day of June 2025

**03.06.2025**
(1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)
**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 24-01-2021ம் தேதி காலை 6.30 மணிக்கு எம்..புதுப்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது, சித்தமநாயக்கன்பட்டியைச் சேர்ந்த முத்துகூடலிங்கம் மகன் வைரமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 19/2021 இதச பிரிவுகள் 341,323 -இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். சாட்சியால் பதிவு செய்யப்பட்ட **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது .

2) பின்னர் அசல் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து வழக்கினை மேல்

விசாரணைக்காக எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 7.15 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராசு, சோலைப்பாண்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். சாட்சியால் தயார் செய்யப்பட்ட **மாதிரி வரைபடம் அசாஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் வைரமுத்து, மருதராஜ், நாகேந்திரன், சஞ்சீவிராஜா, ராசு, சோலைப்பாண்டிஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர் வழக்கின் எதிரிகளைத் தேடிஅன்று காலை 09.30 மணிக்கு சித்தமநாயக்கன் பட்டி பெருமாள் கோவில் விலக்கில் வைத்து காரணம் கூறி கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து எதிரிகளை நிலைய பிணையில் விடுவித்தேன். எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 341, 323 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ,சா.,ஆ.–3 முதல் தகவல் அறிக்கையில், காலம் எண். 12–ல் இன்று 21–01–2021 காலை 6.30 மணிக்கு நிலையம் வந்து இந்த புகாரை கொடுக்கிறேன் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், தவறுதலாக 24–01–2021 என்பதற்கு பதிலாக, 21–01–2021 என பதிவு செய்யப்பட்டுள்ளது. சாட்சிகள் வைரமுத்து, மருதராஜ், நாகேந்திரன், சஞ்சீவிராஜா ஆகியோர் அளித்த வாக்குமூலத்தில் 21–01–2021ம் தேதி காலை 6.30 மணிக்கு சாட்சி வைரமுத்து (அ.சா.–1) என்பவரை வழிமறித்து, அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், தவறுதலாக 24–01–2021 என்பதற்கு பதிலாக, 21–01–2021 என

பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2) அ.சா.–1 வைரமுத்து சம்பவத்தில் காயமடைந்து எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்பது குறித்து விசாரித்தேனா என்றால் அ.சா.–1 வைரமுத்து மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லாமல் நாட்டு வைத்தியம் எடுத்துக்கொண்டதாக தெரிவித்ததால் மருத்துவமனை சென்று விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் ஆட்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். அ.சா.–1 வைரமுத்து சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், உண்மையில் சம்பவம் நடக்கவில்லை என்பதால்தான் சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியானது முதல் தகவல் அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களில் முரண்பட்டு 21–01–2021 என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(3) நான் சொன்ன நேரத்தில் சொன்ன நாளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடமே போகாமல் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் அத்தாட்சி ஆகியவை பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன நாளில் சொன்ன இடத்தில் எதிரியை கைதுசெய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.